සියලුම හිමිකම් ඇවිරිණි
All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

## கிறிஸ்தவ சமயம் - ක්‍රිස්තු ධර්මය

தரம் : **6** நேரம்: 2 மணித்தியாலம்

| பெயர் /சுட்டெண்: |
|---|

**பகுதி I**

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக**
- **மிகப் பொருத்தமான விடையினைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**

www.e-kalvi.com

1. இறைவன் நான்காவது நாள் எதைப் படைத்தார்?
   1) வானம்,பூமி 2) மரம்,செடி,கொடிகள்
   3) சூரியன்,சந்திரன் 4) மனிதன்

2. இறைவன் மனிதனை உருவாக்கி குடியமரச் செய்தது
   1) ஏனோக்கில் 2) ஏதேனில்
   3) கெத்சமனயில் 4) பூந்தோட்டத்தில்

3. சாஸ்திரிகள் மூவர் இயேசு பாலகனை பார்ப்பதற்கு எடுத்துச் சென்றவைகள்
   1. ஆடுகள் 2) தங்கமும்,ஆட்டுக்குட்டியும்
   3) தங்கமும் வெள்ளைப் போலமும் 4) பொன்

4. இயேசு பாலகன் பாஸ்கா பண்டிகைக்காக திருக்கோயிலுக்கு போன போது அவருடைய வயது எத்தனை?
   1) பன்னிரண்டு வயது 2) பத்து வயது
   3) பதினொரு வயது 4) பதினைந்து வயது

5. இயேசு கிறிஸ்துவின் சிலுவையை தூக்கிச் செல்ல உதவி செய்தவர் யார்?
   1) அரிமத்தியா யோசேப்பு 2) சீரேனியா சீமோன்
   3) நூற்றுக்கதிபதி 4) பேதுரு

- **இலக்கம் 6 இருந்து 10 வரை தரப்பட்டுள் வாக்கியங்கள் சரியாயின் (√) என்றும் பிழையாயின் (X) என்று இடுக.**

6. எம்மாவூருக்கு சென்ற சீடர்களுக்கு இயேசு தரிசனமானார் ( )

7. பாவம் என்பது இறைதிட்டத்தை செய்யாதிருத்தல் ( )

8. திருமுழுக்கு யோவான் மக்களுக்கு கெனசரேத்து ஆற்றினருகே திருமுழுக்கு வழங்கினார் ( )

9. இயேசு கிறிஸ்துவுக்கு வந்த சோதனைகளில் அவர் பதில் கொடுத்தது வார்த்தையினாலாகும் ( )

10. பரிசேயர் அந்நிய ஜாதிகள் என கூறப்பட்டார்கள் ( )

♦ **இலக்கம் 11 இலிருந்து 15 வரையான வினாக்களுக்கு யு பகுதியில் கூறப்பட்ட வாக்கியத்திற்கு பொருத்தமான விடையை தெரிவு செய்து இணைக்க**

| A | B |
|---|---|
| 11. உபசரிப்பாளர்களாவர் | • பேதுரு |
| 12. அயலவர்களை நேசிப்பதைக் குறித்து | • பிலிப்பு |
| 13. விசுவாசத்தில் கிறிஸ்தவர்களாகிய எமக்கு | • காபிரியல் வானதூதன் |
| 14. கிறிஸ்து பிறப்பை மரியாளுக்கு அறிவித்தது | • நல்லசமாரியன் |
| 15. இயேசுவின் பிரதான சீடன் | • சுகமுண்டு |

♦ **இலக்கம் 16 இலிருந்து 20 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக் குறியிலிருந்து தெரிவு செய்து எழுதுக.**

| சீமோன் பேதுரு, இயேசு கிறிஸ்து, இரண்டு, தூய ஆவி, நாற்பது |
|---|

16. எமது பாவத்திற்கு மன்னிப்பை பெற்றுத் தருவதற்காக தன்னையே பலியாக்கியவர் .................................. ஆவார்.

17. கிறிஸ்துவின் திருமுழுக்கின் போது புறா .................................................... யை அடையாளப்படுத்துவதாகும்.

18. இயேசு கிறிஸ்து ........................................................ நாட்கள் உபவாசமாய் இருந்தார்.

19. எருசலேம் சபையின் தலைவர் ............................................................ ஆவார்.

20. சமாரியன் சத்திரத்தின் உரிமையாளருக்கு .................................................. வெள்ளிக் காசுகளைக் கொடுத்தான்.

(20x2=40 புள்ளிகள்)

## பகுதி II

♦ **முதலாம் வினா கட்டாயமானதாகும். முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

1. 1. இயேசு கிறிஸ்துவின் கல்லறைக்கு சென்ற பெண்கள் இருவர் யார்?
   2. கிறிஸ்துவின் நற்செய்தியை அந்நிய மக்களுக்கு எடுத்து செல்வதற்கு உம்மால் செய்யக் கூடியவைகள் 2 எழுதுக.
   3. திருமுழுக்கு யோவானின் பெற்றோர்கள் யாவர்?
   4. சீடர்களுக்கு தூய ஆவியின் அபிஷேகம் எப்போது கிடைக்கப் பெற்றது?
   5. இயேசு பாலகனின் பிறப்பின் செய்தியை முதன் முதலாக வான தூதரினால் யாருக்கு கூறப்பட்டது?
   6. நான் பிதாவின் வீட்டில் இருக்க வேண்டும் என்று யாரால்? யாருக்கு? கூறப்பட்டது?
   7. இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட நாளைக் குறிப்பது...........................
   8. உபசரிப்பாளனின் தலைவன் யார்?

(2x8=16 புள்ளிகள்)

2. 1. இறை படைப்பின் முதன்மையானது யாது? (2 புள்ளிகள்)
   2. இறைவன் படைத்தவை மூன்றினை எழுதுக (3 புள்ளிகள்)
   3. மனிதனினால் சூழல் அசுத்தமடையும் சந்தர்ப்பங்கள் 5 எழுதுக. (6 புள்ளிகள்)

3. 1. இயேசு கிறிஸ்து நாற்பது நாட்கள் எங்கே நோன்பு (உபவாசம்) இருந்தார் (2 புள்ளிகள்)
   2. இயேசு கிறிஸ்துவுக்கு வந்த சோதனைகளை முறைப்படி எழுதுக. (3 புள்ளிகள்)
   3. கிறிஸ்தவ பிள்ளையாக உமக்கு வரும் சோதனைகள் ஐந்தினை எழுதி அவற்றில் வெற்றி பெறும் வழிகளையும் எழுதுக. (6 புள்ளிகள்)

4. 1. திருமுழுக்கு யோவான் மக்களுக்கு திருமுழுக்கு வழங்கிய இடம் யாது? (2 புள்ளிகள்)
   2. அவரின் செயற்பாடு என்ன? (3 புள்ளிகள்)
   3. திருமுழுக்கு பெற்ற உமது வாழ்வில் இருக்கக் கூடிய குணாதிசயங்கள் 5 எழுதுக (6 புள்ளிகள்)

5. 1. சமாரியாவுக்கு நற்செய்தியை எடுத்து சென்றது யார்? (2 புள்ளிகள்)
   2. சமாரிய மக்கள் தூய ஆவியானவரை அனுபவம் பெற்ற விதங்கள் மூன்று எழுதுக. (3 புள்ளிகள்)
   3. கிறிஸ்தவ பிள்ளையாக இறை வழிகாட்டலின் ஊடாக செயற்பட்ட சந்தர்ப்பங்கள் 5 எழுதுக (6 புள்ளிகள்)

6. 1. இயேசு கிறிஸ்துவின் அன்பை குறித்து கற்பிக்கும் உவமைக் கதை எது? (2 புள்ளிகள்)
   2. சமாரிய மனிதன், கீழே விழுந்துகிடந்த போது அருகில் கடந்து சென்ற இருவர் யார்? (2 புள்ளிகள்)
   3. நீர் உமது வகுப்பறையில் நண்பர்களுக்கு உதவிய சந்தர்ப்பங்கள் 5 எழுதுக (2 புள்ளிகள்)

7. 1. பிதாவாகிய இறைவன் எமது பாவங்களுக்கு மன்னிப்பைப் பெற்றுத் தருவார் எனக் கூறும் உவமைக் கதை எது? (2 புள்ளிகள்)
   2. இயேசு கிறிஸ்து சீடர்களுக்கு கற்பித்த ஜெபத்தில் குற்றங்களுக்கு மன்னிப்பு பெறுவதை குறிப்பிடும் முறையை எழுதுக. (2 புள்ளிகள்)
   3. கிறிஸ்தவ பிள்ளையாகிய உங்களுடைய குற்றங்களுக்கு மன்னிப்பை கேட்டு ஜெபிக்கும் ஜெபத்தை எழுதுக (2 புள்ளிகள்)

